1995 மார்ச் 17]

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்புதான் சுற்றுலாத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கேற்ப வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக்கொள்ள, அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆனால் வால்பாறையைப் பொறுத்தவரையில் அக்காமலை நீர்வீழ்ச்சி, குரங்கு நீர்வீழ்ச்சி இரண்டும் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் வருவதால், மாண்புமிகு வனத் துறை அமைச்சரோடு கலந்து பேசி, அதற்குரிய கருத்துரு தயாரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதுகாக்கப்பட்ட வனப் பகுதி என்பது உண்மைதான். ஆனால் அங்கே இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கின்றபோது, அந்த வனப் பகுதிக்கோ அல்லது வன விலங்குகளுக்கோ எந்தவிதமான குந்தகமும் விளைவிக்கக்கூடிய நிலை இல்லாத நிலையில் அந்த நீர்வீழ்ச்சிகள் அமைந்திருக்கின்றன. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி இந்த நிதி ஆண்டில் ஏற்பாடு செய்வீர்களேயானால் வால்பாறை மக்கள் பெரிதும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள். எனவே அமைச்சரவர்கள் இதை மறுபரிசீலனை செய்து, துரித நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குரங்கு நீர்வீழ்ச்சியைப் பொறுத்த வரையில் வனத் துறையின் சார்பாக அதை அழகுபடுத்துவதற்கு ஒரு பெரிய திட்டத்தை அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 60, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்.

60—

செங்கம் தொகுதியில் கைமுறைக் காகித அலகு அமைத்தல்

36641*—டாக்டர் பெ. வீரபாண்டியன்:**

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைமுறைக் காகித அலகு, செங்கம் தொகுதியில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செங்கம் தொகுதியில் கைமுறை காகித அலகு ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதி மலைகள் உள்ள பகுதி. கைமுறைக் காகிதம் செய்யத் தேவையான கச்சாப் பொருட்களான, மூங்கில், வைக்கோல், மற்றுமுள்ள ஹாஸ்பிடல் வேஸ்டேஜஸ் இவைகள் எல்லாம் அங்கே அதிகமாகக் கிடைக்கின்றது. அதோடு மட்டுமல்ல, இந்தத் தொகுதி ஏழை எளிய மக்கள் வாழும் பகுதி. எனவே மீண்டும் இதைப் பரிசீலனை செய்து, கைமுறைக் காகித அலகு ஒன்று ஏற்படுத்த அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாட்டில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 20 கைமுறைக் காகித அலகுகள் நடைபெற்று வருகின்றன. இதில் உற்பத்தி செய்யப்படும் காகிதம் கதர் வாரியத்தின் உபயோகத்திற்கு மேலாக, சில அரசுத் துறைகளிலேயும் பயன்படுத்தப்படுகிறது. அதற்கு மேலாக உள்ள காகிதத்தை வெளி மார்க்கட்டிலே விற்பனை செய்வதில் மிகக் கடினமான சூழ்நிலை இருக்கிறது. அதனால் தேக்கம் ஏற்பட்டு, கடந்த சில ஆண்டுகளாக நஷ்டத்தில் இயங்கி வந்த இந்த அலகுகள் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் ஓரளவுக்கு லாபத்தில் நடைபெற்று வருகின்றன. ஆகவே தற்போது எண்ணமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைமுறைக் காகிதம் உறுதியாகவும், பல வண்ணங்களிலும்

1995 மார்ச் 17]

இருப்பதால் அது மக்களைக் கவராமல் இருக்கிறது. இது கார்ட் போர்ட், பைல் போர்ட், ரோனியோ பேப்பர், பான்ட் பேப்பர் போன்றவை தயாரிக்கக்கூட பயன்படுத்தப்படுகிறது. எனவே மீண்டும் இதைப் பரிசீலனை செய்யக் கேட்டுக் கொள்கிறேன். இதை ஏற்படுத்த 2½ஏக்கர் நிலம் தேவை என்றும், ஓர் அலகுக்கு 20 முதல் 30 ஆட்கள் தேவை என்றும் நினைக்கிறேன். எனவே செங்கம் தொகுதியில் கைமுறைக் காகித அலகு ஏற்படுத்த அரசு பரிசீலிக்குமா என்று கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அனைத்து வகைகளிலும் இந்தக் காகிதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதற்கும் மேலாக உற்பத்தி இருக்கிற காரணத்தால்தான் அவற்றை வெளி மார்கெட்டில் விற்க அல்லது மற்ற முறைகளில் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை இல்லாத காரணத்தால் தற்போது எண்ணமில்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

43—

மருங்கூரணியில் கூட்டுறவு அங்காடி அமைத்தல்

*25362—**திரு. சி. சுவாமிநாதன்:**

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், மாந்தங்குடி மற்றும் சுந்தம்பட்டி ஊராட்சி, மருங்கூரணியில் புதியதாக கூட்டுறவு அங்காடி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை ஒன்றியம், மாந்தங்குடி மற்றும் சுந்தம்பட்டி ஊராட்சி மருங்கூரணியில் புதியதாக நியாயவிலைக்கடை அமைக்கும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]